பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 30 புதன்கிழமை 16.11.2022 கதிர் 11

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்றைய சந்திப்புகள் குறித்து இன்று குறிப்பிடுவேன் என்று நேற்று இந்தப் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன் அல்லவா?

அதன்படி இன்று அவற்றை ஒவ்வொன்றாக பார்ப்போம்

☞2

### படையினருக்கான நில அபகரிப்பு பற்றிய கலந்துரையாடல்

# அரச அதிகாரிகளுக்கான நேற்றைய கூட்டத்தை ஆளுநரின் தனிப்பட்ட செயலாளரே நடத்தினார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.16

வடக்கு மாகாணத்தில் நிலைகொண்டு படையினருக்கான நில சுவீகரிப்பில் உள்ள இடையூறுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் கூட்டம் இடம்பெற்றது. அரச அதிகாரிகளுக்கான இந்தக் கூட்டத்தை ஆளுநரின் தனிப்பட்ட செயலர் ஒருவர் தலைமை தாங்கி வழிநடத்தினார் என்று கூறப்படுகின்றது.

இது அரச நிரவாக நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறானது எனச் சுட்டிக்காட்டப்படுகிறத்து

இக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள திணைக்கள தலைவர்கள் அனைவரும் ஆளுநர் செயலகத்தில் நேரடியாகப் பிரசன்னமாகியும், ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தோர் சூம் இணைய வழியாகவும்

☞2

# சம்பந்தனின் கூட்ட அழைப்பை தமிழ்க் கட்சிகள் புறக்கணிப்பு!




## சுமந்திரன் விடுத்தமையால் வந்தது வினை மாவையின் திட்டப்படி அவரிடம் பொறுப்பு

கொழும்பு நவம்பர் 16

சமஷ்டியே தமிழர் அபிலாஷை என ஒரு குரலில் பேச வாருங்கள் என்று தமிழ்க் கூட்டமைப்பு தலைவர் இரா சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் மூலம் விடுத்த அழைப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் உட்பட தமிழ் தேசிய கட்சிகள் எல்லாம் கூண்டோடு புறக்கணித்தன.

அதனால் இனி தமிழ் கட்சிகளைக் கூட்டி அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பை இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எதிர் பார்த்தபடி அவரிடம் ஒப்படைத்து, கூட்ட அழைப்பு விடயத்தைக் கை கழுவினார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்.

☞2

### உளுக்குளத்தில் 3 இளைஞர்கள் கஞ்சாவுடன் கைது

வவுனியா, பாவற்குளம் பகுதியில் மூன்று இளைஞர்கள் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உளுக்குளம் பொலிஸார் நேற்று விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது,

☞2


## அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு இன்னும் என்னதான் இருக்கிறது?

### தமிழ்த் தேசியக் கட்சியின் ஸ்ரீகாந்தா கேள்வி

ஒற்றையாட்சி முறையை அகற்றுவது பற்றி சிந்திப்பதற்குக் கூட சிங்களத் தரப்பில் ஆளும் கட்சி உட்பட எந்தக் கட்சியும் தயாராக இல்லை. இந்த நிலைமையில் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு என்னதான் இருக்கிறது? - தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக நேற்றுத் தாம் வெளியிட்ட

☞11



### உடப்பில் மின்னல் தாக்கி மீனவர் சாவு; மூவர் காயம்

புத்தளம் - உடப்பு பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். உடப்பு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதி கஜித் (வயது 28) எனும் ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

☞2

### 20 ஆம் திகதி பஸில் வருகை

நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைகளை அடுத்து அமெரிக்கா சென்றுள்ள முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வரும் இருபதாம் திகதி அளவில் கொழும்பு

☞11

### மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு

மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றமை குறித்து விசாரிப்பதற்காக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

☞11

### வவுனியா புனர்வாழ்வு நிலைய தடுப்பிலிருந்து ஐவர் ஓட்டம்!

(கி.வசந்தரூபன்)

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து நேற்று மாலை ஐந்து பேர் தப்பியோடியுள்ளனர்.

போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை வவுனியா,

☞11

## மார்ச்சுக்குள் உள்ளூராட்சித் தேர்தல்; ஆணைக்குழு உறுதி என்கிறார் சஜித்!



கொழும்பு,நவ.16

நாட்டின் அரசமைப்பில் உள்ள சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் தமக்கு உறுதியளித்தனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

☞11

### சிறுவன் பலி; மூவர் காயம் குடும்பம் மீது வாள் வெட்டு

#### மாத்தளையில் சம்பவம்



மாத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரணபிமகம பகுதியிலுள்ள வீடொன்றில் சிறுவன் ஒருவன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

☞11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாசகர்களே!

**சந்திப்பு - ஒன்று**

இலங்கைக்கு வருகை தந்துள்ள இரண்டு ஐ.நா. உயர் அதிகாரிகளையும் கூட்டமைப்புப் பிரதிநிதிகளான சம்பந்தன், மாவை, சுமந்திரன், செல்வம், சித்தார்த்தன் ஆகியோர் நேற்றுக் காலை சந்தித்தனர்.

வயது போய் தளர்ந்து இருந்தாலும் நேற்று சம்பந்தன் தெளிவாகவும், திடமாகவும், தமிழர் தரப்புக் கருத்துக்களை உறுதியுடன் முன்வைத்தார்.

செல்வத்தின் கோரிக்கையின் பேரில், அவர் தெரிவித்த கருத்துக்களை சுமந்திரன் மொழிபெயர்த்து வழங்கினார். அதன் ஐ.நா. அதிகாரிகள் இருவரினதும் கேள்விகளுக்கும் சுமந்திரன் விடயங்களைத் தொகுத்துப் பதில் வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதன் பின்புலம் குறித்து சுமந்திரன் தெளிவான கருத்துக்களை முன் வைத்தார்.

நேற்றைய சந்திப்பின் 'ஹைலைட்' என்ன தெரியுமா? தனக்கு விளங்கிய ஆங்கிலத்தில் மாவை ஆற்றிய கருத்துரைதான்.

நிச்சயம் சந்திப்பு முடிந்ததும் அந்த இரு ஐ.நா. உயர் அதிகாரிகளும் தங்களின் ஆங்கில மொழியாற்றலை உறுதிப்படுத்தவும், செவிமடுத்த ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சியாகவும் ஆங்கில அகராதிகளை தலைகீழாகப் புரட்டி இருப்பர் என்றும் நம்புகிறேன்.

சந்திப்பு முடிந்து போகும்போது ஐ.நா. அலுவலக வாசலில் தமது வாகனத்தில் ஏறப்போன சம்பந்தன், ரெலோவின் தலைவர் செல்வத்தை அழைத்தார்.

"செல்வம் இன்று மாலை 5.30 மணிக்கு எங்கள் வீட்டில் சந்திக்கின்றோம் தானே?" - என்று கேட்டார்.

"ஓம் ஐயா... மற்றக் கட்சியினர் யாரும் வருவரோ தெரியவில்லை. நான், சித்தார்த்தன், மாவையண்ணன், சுமந்திரன் எல்லாம் வருவோம்" - என்று சம்பந்தனுக்கு உறுதி கூற, அவர் தலையாட்டி விட்டு புறப்பட்டார்.

ஆனால் மாலை கூட்டத்துக்கு செல்வமோ, சித்தார்த்தனோ தலை காட்டக் கூடவில்லை.

**சந்திப்பு - இரண்டு**

நேற்று மாலை சம்பந்தன் வீட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு கூட்டமைப்பு பங்காளி கட்சியான ரெலோ மற்றும் புளொட்டின் தலைவர்கள் கூட வரவே இல்லை.

சுமந்திரன் மூலம் அழைப்பு விடுத்தால் வரமாட்டோம் என்று எதிர்ப்புக் காட்டுகின்றார்களாம் என்பதுதான் உள்ளார்த்தம். ஆனால் அதைக் கூடத் துணிந்து, வெளிப்படையாக, சிறிதரன் எம்.பி. போல சொல்வார்களோ தெரியவில்லை. இப்போது கேட்டால், குறுகிய கால அறிவிப்பு, எங்களுடன் கலந்தாலோசிக்காது ஒழுங்குபடுத்தி விட்டார்கள் என்று சாக்குப் போக்கு சொல்வர் என்பதும் உறுதி.

தான் கூட்டத்துக்கு வரும்போது செல்வத்தை தொலைபேசி மூலம் அழைத்து கேட்டதாகவும் மற்றவர்கள் கூட்டத்துக்கு வராதமையால் தாமும் வரவில்லை என்று செல்வம் கூறினார் எனவும் முணுமுணுத்தார் மாவை.

"நீங்கள் தொலைபேசி அழைப்பு எடுத்தீர்களா? அல்லது அவர் அழைத்து வரமாட்டேன் என்று கூறினாரா?" - என சம்பந்தன் துளைத்தார்.

"இல்லை, நான்தான் எடுத்துக் கேட்டேன்" என்றார் மாவை.

இந்தக் கூட்டத்துக்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மூவருடன் விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே வருவர் என சம்பந்தனும் ஏனையோரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் மாவை, சுமந்திரன் தவிர வேறு யாரும் வரவில்லை.

அவர்கள் வராதமையின் சூத்திரதாரி யார் என்பது சம்பந்தனுக்கு நன்கு தெரியும். அதனால் பந்தை அந்தப் பக்கமே அடித்தார் சம்பந்தன்.

மாவைக்கும் சுமந்திரனுக்கும் நேற்று அவர் காட்டமாக சில விடயங்களைக் கூறினார் எனத் தெரிகிறது.

"தமிழரசுக் கட்சி தனது கடமையைச் செய்யும். நாங்கள்தான் சமஷ்டிக் கட்சி. சமஷ்டியை முன்னெடுப்பது எங்கள் பணி. மற்றக் கட்சிகள் வந்தாலும், வராவிட்டாலும் நாம் அதனை உறுதியாக முன்னெடுப்போம். பங்காளி கட்சிகள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி.

"மாவை கொழும்பில் நிற்பார் என்பதால் அவரது வசதி கருதியே இந்தத் திகதி, நேரத்தை நானே எடுத்து அறிவித்தேன். அதற்கு சாதகமான சமிக்ஞை வரவில்லை. என் அழைப்பை ஏற்கவும், என் வீட்டுக்கு வரவும் பலருக்கு ஏதோ காரணம் நிமித்தம் பிடிக்கவில்லைப் போலும். ஆகவே மீண்டும் ஒரு தடவை அவர்கள் விரும்பிய இடத்தில், அவர்களுக்கு உகந்த நேரத்தில் கூட்டத்தை ஒழுங்குபடுத்த மாவையே முயற்சி எடுக்கட்டும். அந்த நேரத்துக்கு நான் அந்த கூட்டத்துக்கு வருவேன். அவர்கள் வராமல் விட்டாலும் நாம் தனித்து சமஷ்டியை வலியுறுத்தி விடயத்தை முன்னெடுப்போம்" - என்று சம்பந்தன் தெளிவாகக் கூறினார் எனத் தெரிகிறது

தாம் ஏற்பாடு செய்த கூட்டத்திற்கு குழப்பம் விளைவித்து, மற்ற கட்சியின் தலைவர்களை வராமல் தடுத்தவர் யார் என்பது சம்பந்தனுக்கு தெரிந்தும், அதை அவர் வெளிப்படையாக காட்டிக் கொள்ளவில்லை.

தமிழரின் தேசிய பிரச்சினைக்கு ஒற்றுமைப்பட்ட ஓர் நிலைப்பாட்டை எடுக்கும் முயற்சியில் கூட, தனி நபர்களுக்கு முக்கியத்துவம் வந்து விடக்கூடாது என்பதை, அதிலும் விட முக்கிய கருத்தியலாகப் பார்க்கும் அரசியல் அற்பத்தனம் கொண்டவர்களோடு சேர்ந்து தாம் அரசியல் செய்ய வேண்டிய நிலை இருப்பது குறித்து சம்பந்தன் தமக்குள் நொந்து கொண்டிருப்பார் என நினைக்கிறேன்.

**சந்திப்பு - மூன்று**

மனோ கணேசன் மற்றும் ஹக்கீம் ஆகியோர் கூட்டாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை 9:30 மணிக்கு சந்திப்பர் என்று நேற்றைய எனது பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அது தப்பு. நேற்று இரவு 9.30 மணி என்பது அந்தச் சந்திப்புக்கான நேரம் ஆகும்

சந்திப்பு நடைபெற்றதாயினும், நேரம் தாமதித்தமையால் அதன் விடயங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. இன்று காலையில் அது பற்றித் தெரிய வரும் என எதிர்பார்க்கிறேன்.

- மின்னல் -

## அரச அதிகாரி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆளுநர் செயலகம் முன்பாக இடம்பெற்ற - நில அபகரிப்பிற்கு எதிரான - போராட்டம் காரணமாக உத்தியோகத்தர்கள் நேரில் கலந்துகொள்ளாது, யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களும் மாவட்ட செயலக மண்டபத்தில் கூடி சூம் இணையவழியாக கூட்டத்தில் பங்குகொண்டனர். படையினர் மட்டும் நேரில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆளுநரின் தனிப்பட்ட செயலாளர் தலைமையில் 2 மணிக்கு ஆரம்பமாகி 5.30 மணிக்கு நிறைவுபெற்ற இக்கூட்டத்தில் ஆளுநர் பங்குபற்றவில்லை.

ஆளுநரின் தனிப்பட்ட செயலாளர் தனது கருத்தின்போது -

படையினர் நிலைகொண்டுள்ள அல்லது கோருகின்ற நிலங்களின் உரிமையாளரகள் அந்த நிலத்தை வழங்க விருப்பம் இல்லை என்றே தெரிவிக்கின்றனர். இதுவே பெரிய பிரச்சினையாக உள்ளது என படையினரை நோக்கி சிங்களத்தில் உரையாற்றி கருத்துத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற கூட்டங்களிற்கு அமையவெனத் தெரிவித்து படையினர் கோரும் நிலங்கள் தொடர்பில் தனித்தனி இடமாக ஆராயப்பட்டது. ஆனால் கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் எது, அங்கு யார், என்ன முடிவுகள் எடுத்தார்கள் என்பன எவையும் மாகாண அதிகாரிகள் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவற்றின் விவரங்கள் ஆளுநரின் தனிப்பட்ட செயலாளருக்கும் கூட்டத்தில் பங்குபற்றிய படை அதிகாரிகளுக்கும் மட்டும் தெரிந்திருக்கும் போல.

கூட்டத்தில் காணி அமைச்சின் மேலதிக செயலாளர் உரையாற்றும்போது -

யாழில் மட்டும் 68 இடங்களில் அளவீட்டுப் பணியானது பிரச்சினையில் உள்ளது. இதனால் நில அளவீட்டிற்கு மக்கள் தமது எல்லையைக் காண்பிக்க வேண்டும். அத்தோடு எதிர்ப்பு இருந்தால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அப்படி எதிர்ப்போ பிரச்சினையோ இருந்தால் அளவீட்டு உத்தியோகத்தர்களிற்கான முழுமையான பாதுகாப்பை பிரதேச செயலாளர்கள் பொறுப்பேற்று பொலிஸ் பாதுகாப்புடன் கூட்டிச் சென்றால் மட்டுமே அளவீடு செய்ய முடியும். ஏனெனில் ஒவ்வொரு இடங்களிற்கும் 3 அல்லது 4 தடவைகள் சென்றும் அளவீட்டுப் பணியை மேற்கொள்ள முடியவில்லை என அறிக்கையிடப்படுகின்றது. - எனத் தெரிவித்துள்ளார்.

இதன்போது பிரதேச செயலாளர்கள் கருத்து தெரிவிக்கையில் -

அளவீட்டு உத்தியோகத்தர்களிற்குப் பாதுகாப்பு வழங்குவது எமது பணியும் அல்ல. அது எம்மால் முடியாத காரியம். அதேநேரம் படையினர் கோரும் இடங்களில் தனியார் காணிகள் 68 இடங்கள் காணப்படுகின்றன. அங்கே அளவீட்டுப் பணிக்கு முக்கிய பிரச்சினையாக இருப்பது நில உரிமையாளர்கள் அந்த நிலத்தை வழங்க விருப்பவில்லை. தமது இடம் தமக்கு வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். அதேநேரம் அரச காணி எனக் குறிப்பிடப்படும் பல இடங்கள் பிரதேச செயலாளர்களின் ஆளுகையில் உள்ள அரச காணிகள் அல்ல. அவை திணைக்களங்களிற்கு சொந்தமானவையாக உள்ளன. உதாரணமாக கல்வித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், பிரதேச சபை, வைத்தியசாலை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற பல திணைக்களங்களிற்கு உரித்தான நிலத்தை பிரதேச செயலாளர் வழங்கும் அதிகாரம் எந்த இடத்திலும் காணப்படவில்லை.

இந்தத் திணைக்களங்கள் - அதாவது காணிக்கு உரித்தான திணைக்களங்கள் - தமது காணியை வழங்க சம்மதக் கடிதங்களையும் அதன் பின்பு அதற்குரிய நடவடிக்கைக்கும் இணங்கினால் மட்டுமே பிரதேச செயலாளரகள் அதற்கான பணியை மேற்கொள்ள முடியும். - எனத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் கடற்படையினர் தனியார் காணியில் 58 இடங்களையும் அரச காணியில் 43 இடங்களையும் கோருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பிலும் இதே விடயம் சுட்டிக்காட்டப்பட்ட சமயம் வட்டுவாகல் கடற்படை முகாமில் உள்ள நிலத்தில் சீனர் ஒருவர் தனக்கு சொந்தமான நிலத்தை கடற்படையினருக்கு வழங்க சம்மதம் தெரிவிப்பதனால் அந்த இடத்தை அளவீடு செய்து தருமாறு கடற்படையினர் கோரினர் . காணி உரிமையாளர் வருகை தந்து தனது காணியை அடையாளம் காட்டினால் அளவீடு செய்ய முடியும் என நில அளவைத் திணைக்களத்தினால் பதிலளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளையில் உள்ள நில விடயமும் பரந்தனில் உள்ள காணி விடயம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

வடக்கின் 5 மாவட்ட அதிகாரிகளும் சூம் வழியே இணைக்கப்பட்டிருந்த போதும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மிக அதிக இடங்கள் தொடர்பில் படையினரால் பிரஸ்தாபிக்கப்பட்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தொடர்பில் உரையாடப்பட்டது. மன்னார் மற்றும் வவுனியா தொடர்பில் உரையாடுவதற்கு நேரம் போதாமையினால் அந்த இரு மாவட்டங்கள் தொடர்பில் உரையாடலேயே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதேநேரம் மாகாண காணி ஆணையாளர், காணி உருத்து அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குகொண்டிருந்தனர்.

இதேநேரம் மக்களின் நிலங்கள் தொடர்பில் உள்ள பிரச்சினைகளை இனம்கானவே இக் கூட்டமே அன்றி படையினருக்கு அபகரிக்க இக்கூட்டம் அல்ல என ஆளுநர் தெரிவித்திருந்த போதும் மக்களின் நிலத்தை அபகரிக்க முயற்சிக்கப்படுவதாக தெரிவித்து ஆளுநர் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டம் 1.30 ற்கு ஆரம்பமாகி 4 மணிவரை இடம்பெற்றபோதும் 3 மணிக்கு ஆளுநர் செயலகத்திற்குள் பலரும் செல்வதற்காக ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் நின்ற பலரையும் இழுத்துத் தள்ளி பொலிஸார் இடமெடுத்துக் கொடுக்கவே சிலர் ஆளுநர் செயலகம் உள்ளே சென்றனர் எனவும் இதன்போது பலரும் தாக்கப்பட்டனர் எனவும் போராட்டத்தில் முன்நின்ற சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

## சம்பந்தனின் கூட்ட .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் மூலம் சம்பந்தன் விடுத்த அழைப்பின்படி நேற்று மாலை 5.30 மணிக்கு சம்பந்தனின் இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஆக சுமந்திரனும் மாவை சேனாதிராசா மட்டுமே அங்கு கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் கூட அங்கு சமூகம் தரவில்லை.

கூட்டம் நடைபெறாமல் போனதன் பின்னணி குறித்து சம்பந்தன் முழுமையாக அறிந்து கொண்டார் என தெரிய வந்தது. மற்றைய கட்சித் தலைவர்களோடு தொடர்பு கொண்டு விடயத்தை பின்னால் இருந்து இயக்கிய சூத்திரதாரி தங்கள் மத்தியில் இருப்பதை அவர் உணர்ந்து கொண்டார் எனவும் தெரிகிறது.

நேற்று மாலை தம்மைச் சந்தித்த சுமந்திரன் மற்றும் மாவையிடம் சம்பந்தன் பின்வருமாறு கூறினார் என அறிய வந்தது:-

கூட்ட அழைப்பை கூட்டமைப்பின் பெயரில் அதன் தலைவராக நானே விடுத்தேன். என் சார்பில் கூட்டமைப்புப் பிரதிநிதியாக சுமந்திரன் அதனை அனுப்பி வைத்தார். நீங்கள் (மாவை) இந்த சமயத்தில் கொழும்பில் நிற்பீர்கள் என்பதால் அப்படி நேரம், திகதியை நானே தீர்மானித்தேன். உங்களுக்கு வசதியான தீர்மானம் தான் இது. ஆனால் கூட்டத் துக்கு யாரும் வரவில்லை.

என் அழைப்பையும், எனது வீட்டில் சந்திப்பதையும் அவர்கள் விரும்பவில்லை போலும். அதுதான் நிலைமை என்றால் நீங்களே (மாவையே) பொறுப்பெடுத்து ஏற்பாடு செய்து அழையுங்கள். திகதி, நேரம், இடத்தைத் தீர்மானியுங்கள். அங்கு நான் வருவேன்." - என்று கூறி விடயத்தை மாவையிடம் கை கழுவி விட்டார் சம்பந்தன்.

## உளுக்குளதில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா பாவற்குளம் பகுதியில் உள்ள பன்சாலை வீதி ஊடாக சென்ற மூன்று இளைஞர்களின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்து அவர்களை சோதனை செய்தனர். அப்போது அவர்களிடம் இருந்து 50 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த மூன்று இளைஞர்களும் உளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுனர். கைது செய்யப்பட்டவர்கள் 18 - 25 வயதிற்குட்பட்ட - வவுனியா, சூடுவெந்தபுலவு மற்றும் பாவற்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த பொலிசார், மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் மேலும் தெரிவித்தனர்.

## உடப்பில் மின்னல் தாக்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடப்பு - பாரிபாடு கடற் கரையோரத்தில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த நால்வரே மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

உயிரிழந்த நபரின் சடலம் உடப்பு வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. காயமடைந்த மூவரும் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

# வரவு – செலவுத் திட்டத்தால் நடுத்தர மக்கள் மோசமான நெருக்கடியை எதிர்கொள்ளநேரிடும்!

## சம்பிக்க எச்சரிக்கை



2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரச வருமானத்துக்கும், அரச செலவிற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

வரி அதிகரிப்பை மாத்திரம் இலக்காக கொண்ட இந்த வரவு – செலவுத் திட்டத்தால் நடுத்தர மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரச வருமானம் 3,500 பில்லியன் ரூபாவாகக் காணப்படும் நிலையில் அரச செலவினம் 8,000 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வருமானத்துக்கும்,செலவிற்கும் இடையிலான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் யோசனைகள் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த வரவு – செலவுத் திட்டம் அமையவில்லை. பொருளாதார மீட்சிக்காக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைக்கு சாத்தியமாகுமா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

கடந்த 08 மாத காலத்தில் அரசாங்கம் அரச வருமானத்தை ஈட்டிக் கொள்ள முறையான திட்டங்களை வகுக்கவில்லை. வரவு – செலவுத் திட்டத்தின் பரிந்துரைகளை முழுமையாக செயற்படுத்தினால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மேன்மேலும் பாதிக்கப்படுவார்கள்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி அக்கறை கொள்ளவில்லை. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்தால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். – என்றார்.

## கஞ்சாவை பயிரிடுவது; ஆராய நிபுணர் குழு!

ஏற்றுமதிக்காக மட்டுமே கஞ்சாவை பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராய நிபுணர் குழு நியமிக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## 300 சதொச கடைகளுக்கு மதுபான உரிமம் கிடைக்கிறது

நாடு முழுவதும் உள்ள 300 சதொச கடைகளுக்கு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்க, கலால் திணைக்களம் தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இந்நிலையில் அனைத்து சதொச நிறுவனங்களுக்கும் உடனடியாக மதுபான உரிமங்களைப் பெறுவதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் சில சதொச வர்த்தக நிறுவனங்கள் அடிப்படை நியமங்களுக்கு இணங்கவில்லை என்பதால் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

விதிகளுக்கு இணங்காத சில சதொச நிறுவனங்களுக்கு இந்த அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொடுக்கும்போது விசேடகவனம்செலுத்தப்பட்டுள்ளது.

கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் தேவையான அனுமதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும், சதொச கடைகளில் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கலால் திணைக்களம் இதுவரை சுமார் 6 ஆயிரம் மதுபான உரிமங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விழுந்த நாட்டை மீளெழுப்பும் வரவு – செலவுத் திட்டமாம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ பெருமிதம்

அபிவிருத்திக்கான வரவு – செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. நாடு விழுந்துள்ள நிலையில் இருந்து விரைவாக எழுவதை நோக்கமாக கொண்டு 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம் என நீதி,சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சுதந்திரம் பெற்றதன் பின்னரான காலப்பகுதியில் நாடு என்றுமில்லாத அளவிற்கு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது சவால் மிக்கதாக காணப்பட்டாலும், அதனைப் பொறுப்புடன் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் அபிவிருத்தியை இலக்காக கொண்டு சமர்ப்பிக்கப்படவில்லை. மாறாக பொருளாதார ரீதியில் விழுந்த இடத்தில் இருந்து விரைவாக எழுவதை நோக்கமாக கொண்டுள்ளது, என்பதைத் தெளிவாக விளங்குகிறது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக அரச வருமானத்தையும்,நேரடி வரிகளையும் அதிகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள வெளிநாட்டு கையிருப்புப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

பாரம்பரியமான வரவு – செலவுத் திட்டத்துக்கு அப்பாற்பட்டதாகவும், யதார்த்த நிலையை அடிப்படையாக கொண்டதாகவும் வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார். நெருக்கடியான பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம். – என்றார்.

# விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைக்கு எரிபொருளை வழங்க சீனா இணக்கம்!

விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைக்கு ஒரு கோடியே 60 லட்சம் லீற்றர் எரிபொருளை வழங்க சீனா ஒப்புக்கொண்டுள்ளது.

இதில் 75 லட்சம் லீற்றர் விவசாய தேவைகளுக்காக வழங்கப்படவுள்ளது.

இந்த எரிபொருள் இருப்புக்கள் டிசெம்பர் மாதத்துக்குள் இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இருப்புக்களைஅறுவடைக்கு முன்னதாக வழங்க முடியாத போதிலும் அறுவடையின்போது வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ள இந்த எரிபொருள் இருப்பு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்வேண்டுகோளுக்குஇணங்க சீனாவால் வழங்கப்படவுள்ளது.

# யானை தாக்கி தொழிலாளி மரணமானமைக்கு வனவளத்துறையின் அலட்சியப்போக்கே காரணம்!

## செந்தில் தொண்டமான் கண்டனம்



பூனாகலை அம்பட்டிக்கந்த பகுதியில் தொழிலாளி ஒருவர் யானைதாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளமை மிகவும் கண்டிக்கத்தக்கது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் முழுமையான பொறுப்பை ஏற்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் இதுதொடர்பில் வனவளத்துறைக்கு பலமுறை அறிவித்துள்ளதாகவும் போதுமான நடவடிக்கைகளை வனவளத் துறையினர் எடுத்திருக்கவில்லை என அந்தப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில், பசும்பால் கொண்டுசென்ற தொழிலாளி ஒருவர் யானை தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வனவளத் துறையினர் இதுவரை போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதற்கான முழுமையான பொறுப்பை வனவளத் துறையினர் ஏற்க வேண்டும். மக்களின் முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தியிருந்தால் தொழிலாளி ஒருவரின் உயிர் பறிபோயிருக்காது. தோட்ட நிர்வாகமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

வனவளத்துறையின் அலட்சியத்தை வன்மையாக கண்டிப்பதுடன், உடனடியாக இங்குள்ள மக்களின் பாதுகாப்பை கருதி மக்கள் வசிக்கும் மற்றும் தொழில்புரியும் பகுதிகளுக்குள் யானைகளின் வருகையை கட்டுப்படுத்த உரிய பாதுகாப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும்.

இல்லாவிட்டால் வனவளத்துறை காரியாலயம் சுற்றிவளைக்கப்பட்டு, வனவளத்துறையினருக்கு எதிராக பாரிய போராட்டங்களைச் செய்வதற்கு இ.தொ.கா தயாராக உள்ளது.

மேலும் உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த பெண்ணின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். – எனத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏவல் படைகளின் கேவலம்

நோய் மூலத்திற்குத்தான் மருத்துவம் செய்ய வேண்டும். நோயின் வெளிப்பாடான குணங்குறிக்கு அல்ல. ஆனால் சில சமயங்களில், நோயின் உபாதையைக் குறைப்பதற்கு குணங்குறிக்கும் சிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டு விடுகின்றது.

அப்படி ஒரு வேலையைத்தான் இப்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செய்ய முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

சரியோ, பிழையோ முன்னாள் ஜனாதிபத கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்களின் ஒன்று கூடல் சுதந்திரம், அமைதி வழியில் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் ஓரளவு மதிக்கப்பட்டன. மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு காலி முகத் திடலை ஒட்டிய இடத்தையும் கூட அவரே அமைத்துக் கொடுத்தார். அதுவே அவரது ஆட்சிக்கு வினையாயிற்று என்பது வேறு விடயம்.

அவரது ஆட்சிக்கு எதிரான தமது மன உணர்வுகளை மக்கள் வெளிப்படுத்துவதற்கு அவர் ஆரம்பத்தில் இருந்தே தாராளமாக இடமளித்தமைதான் பின்னர் அவருக்கு எதிராக விஸ்வரூபம் எடுத்தது.

பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது மக்களின் – குறிப்பாகத் தமிழ் மக்களின் – மன உணர்வுகளை வெளிப்படுத்த இடமளிக்காமல், கொடுங்கோல் அரக்கன் போல அடக்குமுறைகளை ஏவி விட்ட அவர், பின்னர் தாம் ஜனாதிபதியான போது தமது பௌத்த, சிங்கள மக்களுக்கு எதிராக அதே பாணியை கைகொள்ளப் பின்னடித்தார்.

ஆனால் அவருக்குப் பின்னர் ஆட்சிப் பீடம் ஏறிய அதிகாரத் தரப்பு, அவரது படிப்பினைகளைத் தனக்குப் பட்டறிவாகக் கொண்டு, மக்களின் கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடல் சுதந்திரம், அமைதி வழிப் போராட்டங்கள் மூலம் கருத்து வெளியிடும் உரிமை போன்றவற்றை வெளிப்படையாகவே மீறி, அப்பட்டமாகவே அடக்குமுறையை மேற்கொண்டு வருகின்றது என்பது கண்கூடு.

வீதியோரமாக இரண்டு தாய்மார் தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் பதாகை தாங்கி நடந்து போகக் கூட அனுமதிக்க முடியாது என்று அடாவடித்தனம் பண்ணும் அளவுக்கு நாட்டின் பொலிஸ் துறை குண்டர் படை போல போக்கிரித்தனமாக நடக்கத் தொடங்கிவிட்டது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மனித உரிமைகள் ஆணைக்குழு பொங்கி எழுந்துள்ளது. பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை இவ்விடயத்தில் விசாரணைக்கு விளக்கம் கேட்டு அது அழைத்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைக்கு இவர்களது தரப்பு வெறும் கருவிதான். மேலிடத்து உத்தரவை அப்படியே செய்யும் ஏவல் படை இவை.

ஆனால் சீருடை அணிந்து, இப்படி ஏவல் படையாக மனித உரிமை மீறலை மேற்கொண்டு வரும் பிரகிருதிகளை அடையாளம் கண்டு, மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அம்பலப்படுத்துமானால் சர்வதேசத்தின் தடை அவர்கள் மீதும் பாய அது வசதியாக இருக்கும். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இதுவும் ஒரு நல்ல முறைமைதான்.

# பாதுகாப்புக்கு அதிக நிதி ஏற்றுக்கொள்ள முடியாது!

### மு.கா. தலைவர் ஹக்கீம் காட்டம்



மக்கள் அன்றாடம் வாழமுடியாத நிலையில் வரவு – செலவு திட்டத்தில் பாதுகாப்புக்கு மொத்த வரவு – செலவு திட்டத்தில் 10 வீதம் ஒதுக்கி இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர், அதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையில் கொள்கை அடிப்படையில் புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஜனாதிபதி எடுத்து வரும் முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

ஆனால் மக்கள் பாரிய வறுமை கோட்டின் கீழ் இருக்கும் நிலையில் மக்களுக்கு மானியங்கள் எவையும் இல்லாத நிலையில் பாதுகாப்புக்கு பாரியளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக வரவு – செலவுத் திட்டத்தின் மொத்த தொகையில் 10 வீதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தளவு நிதியை பாதுகாப்புக்கு ஒதுக்குவதற்கு பாரிய அச்சுறுத்தல்கள் எவையும் இல்லை.

அத்துடன் இந்தியாகூட பாதுகாப்புக்கு வரவு – செலவுத் திட்டத்தில் 9 வீதமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எனவே மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும் சிந்தித்திருக்கலாம். – என்றார்.

# 2023 வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 135 வாக்குகள் கிடைக்கும்!

### வஜிர அபேவர்த்தனவுக்கு நம்பிக்கை

கொழும்பு, நவ. 16

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 135 வாக்குகள் கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவித்து, பொது மக்களுக்கு பொருளாதார சுதந்திரத்தை வழங்கும் எனக் கூறினார்.

வரவு – செலவுத் திட்டம் எதிர்கால சந்ததியினருக்கான சாதகமான முன்மொழிவு எனவும் பொது மக்களை ஏமாற்றுவதில் கவனம் செலுத்தவில்லை எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.



# வியட்நாம் கடலில் மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு புலம் பெயர்ந்தோர் அமைப்பு மனிதாபிமான உதவி!

வியட்நாம் கடற்பரப்பில் மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு சர்வதேச புலம் பெயர்ந்தோர் அமைப்பு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச புலம் பெயர்ந்தோர் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

வியட்நாமிலுள்ள முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தாமாக முன்வந்து இலங்கைக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தால், அதற்கான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

303 இலங்கையர்களை ஏற்றிச்சென்ற மியன்மாரின் மீன்பிடிப் படகு கடந்த திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூர் கடற்பரப்பில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கரை ஒதுங்கியது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக படகில் இருந்த ஒருவர் இலங்கை கடற்படைக்கு அறிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, வியட்நாம் சிங்கப்பூர் மற்றும் மலேசியா அரசாங்கங்களைத் தொடர்புகொண்டு குறித்த படகு தொடர்பான தகவல்களை இலங்கை பரிமாறிக்கொண்டது.

இதனையடுத்து, படகுக்கு அருகில் பயணித்த ஜப்பானிய கப்பல் மூலம் இலங்கையர்கள் மீட்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2022



'காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது.'
- தமிழகக் கவிஞர் அறிவுமதி -

# வரவு – செலவு திட்டத்தில் ஒன்றரை ரில்லியன் ரூபா வரி வருமானத்தைப் பெற அரசு உத்தேசிப்பு!



அநுரகுமார சாடல்

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பரிந்துரையை ஜனாதிபதி முன்வைக்கவில்லை. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஒன்றரை ரில்லியன் ரூபா வரிவருமானத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் பாதீடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஏதேனும் நிவாரணம் கிடைக்கப் பெறுமா என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்பு முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் பாதிக்கப்பட்ட மக்களை புறக்கணிக்கும் வகையில் காணப்படுகிறது.

பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு குறைந்த பட்சமேனும் நிவாரணம் வழங்கும் எவ்வித பரிந்துரைகளும் வரவு – செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

மாறாக, வரி அதிகரிப்பை மாத்திரம் வரவு – செலவுத் திட்டம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு வரி அதிகரிப்பின் ஊடாக மாத்திரம் ஒன்றரை ரில்லியன் ரூபா அரச வருமானத்தை ஈட்டிக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வரி அதிகரிப்பு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும். பொருளாதார ரீதியில் இருந்து நாட்டு மக்களை மீட்டெடுக்கும் நடைமுறை திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை.

மறுபுறம் இலாபம் பெறும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தி அரச வருமானத்தை குறுகிய காலத்தில் ஈட்டிக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

கடன் பெறுவது அரசாங்கத்தின் பிறிதொரு கொள்கையாக உள்ளது. நாட்டு மக்களுக்கு பயனற்ற வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்துவோம். – என்றார்.

# வரவு – செலவுத் திட்டம் ஒரு புரியாதபுதிர்

## தயாசிறி ஜயசேகர கருத்து

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போன்று 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தையும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது.

வரிக்கு மேல் வரி அதிகரிப்பை நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் அரசாங்கம் வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக விசேட கவனம் செலுத்தியுள்ளது.

ஶ்ரீலங்கன் எயர்லைன் உள்ளிட்ட லாபம் அடையும் நிறுவனங்களை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவது நெருக்கடிகளை அதிகரிக்கும்.

அத்துடன் அரச சேவையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. அதேபோன்று வரிகள் மீது வரிகள் அறவிடும் வரவு – செலவுத் திட்டமாகவே இது காணப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புரிந்துகொள்ள முடியாததைப் போன்று இந்த வரவு – செலவுத் திட்டத்தின் உள்ளடக்கங்களும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளன.

குறுகிய காலத்தில் அரச வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த வரவு – செலவுத் திட்டம் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக வரி அதிகரிப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டது,தற்போது வரவு – செலவுத் திட்டத்திலும் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. வரிக்கு மேல் வரி அதிகரிப்பை நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. – என்றார்.



# நீண்டகால வேலைத்திட்டத்தை இலக்குவைத்து முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம்!

## ஹரின் பெர்னாண்டோ புகழாரம்



நீண்டகால வேலைத்திட்டத்தை இலக்குவைத்தே வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பொருளாதார சவாலை வெற்றிகொள்ள வேண்டுமாக இருந்தால், ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர், அதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வரவு – செலவுத் திட்டம் மூலம் எந்தவிதமான வரி அதிகரிப்பும் மேற்கொள்ளாமல் நீண்டகால வேலைத் திட்டத்தை இலக்கு வைத்தே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இம்முறை வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிப்பது இலங்கை வரலாற்றில் மிகவும் சவால் மிக்கதாகும். ஏனெனில் இலங்கையில் வெளிநாட்டு செலாவணி பூச்சியத்தில் இருக்கின்றது.

டொலர் இல்லை. கையிருப்புகளை அதிகரிப்பதன் மூலமே முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதனால் அவ்வாறானதொரு சவாலுக்கு மத்தியிலேயே ஜனாதிபதி வரவு – செலவுத் திட்டத்தை முன்வைத்திருக்கின்றார்.

அதனால் நாட்டு மக்கள் இந்த நிலைமையை உணர்ந்து கொள்வார்கள். 3 மாதங்களுக்கு முன்னர் நாடு இருந்த நிலைமை மக்களுக்கு தெரியும்.

சமையல் எரிவாயு, எரிபொருள் பெற்றுக்கொள்ள பல நாள்கள் காத்திருக்கவேண்டி இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமை மாறியுள்ளதுடன் இயல்பு நிலையை நோக்கி நாடு மாறி வருகின்றது. அதன் பிரகாரமே வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் பொருளாதார சவாலை வெற்றிகொள்ள வேண்டுமாக இருந்தால், ஜனாதிபதியின் வேலைத் திட்டத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.

அரசியல் நோக்கத்துக்காக வீதிக்கிறங்காமல் சரியான விடயத்துக்காக வீதிக்கு இறங்குவதில் பிழை இல்லை. அதனால் இன்னும் ஒருவருடம் ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

அதன் பின்னர் தேர்தலுக்கு சென்று எமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதனால் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டிருக்கும் வரவு – செலவுத் திட்டம் நீண்டகால இலக்கை நோக்கி முன்வைக்கப்பட்டதொன்றாகும். – என்றார்.

# சீனத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய உள்ளூராட்சி உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை!

## ஐ.தே.க. அதிரடி

கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர் சஷி ஹெட்டியாராச்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

பிரதேச சபை உறுப்பினர் சசி ஹெட்டியாராச்சி நடத்திய இந்த போராட்டத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் தங்கள் கட்சி இராஜதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அரசாங்கம் சீனாவுடனான கடன் விவகாரங்களை இராஜதந்திர உறவுகளின் மூலம் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் ரங்கே பண்டார கூறியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு என்பது நிதி அமைச்சரின் பிரச்சினையே தவிர பிரதேச சபை உறுப்பினரின் பிரச்சினை அல்ல என்றும் பிரதேச சபை உறுப்பினரை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகக் கட்சி விரைவில் தீர்மானிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடனை மறுசீரமைக்குமாறு சீனாவைக் கோரி கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர் சஷி ஹெட்டியாராச்சி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இன்றைய உரத் தட்டுப்பாடுதான் நாளை உணவுத் தட்டுப்பாடாகும்


## ஜி20 மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி விளக்கம்

இந்தோனேஷியாவின் பாலி நகரில் நடைபெறும் ஜி20 மாநாட்டில் உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு குறித்த அமர்வில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் ஆகிய பல தலைவர்கள் அதில் பங்கேற்றனர்.







பிரதமர் மோடி ஆற்றிய உரையில் கூறியதாவது:–

கொரோனா பெருந்தொற்றின்போது தனது 1.3 பில்லியன் மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை இந்தியா உறுதி செய்தது. அதே நேரத்தில் பல்வேறு நாடுகளுக்கு உணவு தானியங்களும் விநியோகிக்கப்பட்டன. 'இன்றைய உர தட்டுப்பாடு தான், நாளைய உணவு தட்டுப்பாட்டிற்கு வித்திடும்'. இது நடக்கும் போது இதற்கான தீர்வு உலக நாடுகளிடம் இருக்காது. உரம் மற்றும் உணவு தானியங்களின் விநியோக சங்கிலியை தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கான பரஸ்பர ஒப்பந்தத்தை நாம் மேம்படுத்த வேண்டும். நிலையான உணவு பாதுகாப்பிற்காக இந்தியாவில் இயற்கை விவசாயத்தை நாங்கள் ஊக்குவிப்பதோடு, சிறு தானியங்கள் போன்ற ஊட்டச்சத்து மிக்க மற்றும் பாரம்பரிய உணவு தானியங்களையும் மக்களிடையே மீண்டும் பிரபலப்படுத்துகிறோம். உலகளாவிய ஊட்டச்சத்து குறைபாடு, பசி ஆகிய பிரச்சினைக்கு சிறுதானியங்கள் தீர்வாக அமையலாம். சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக, அடுத்த வருடம் மிகுந்த உற்சாகத்தோடு நாம் அனைவரும் கொண்டாட வேண்டும்.




உலகளவில் மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக விளங்கும் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு சர்வதேச வளர்ச்சிக்கு முக்கியம்.எரிசக்தி சந்தையில் ஆற்றல் மற்றும் நிலைத்தன்மையின் விநியோகத்திற்கு எந்த கட்டுப்பாடுகளையும் நாம் ஊக்குவிக்கக் கூடாது. தூய்மையான எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் என்பதில் இந்தியா உறுதி பூண்டுள்ளது. – இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# இந்தியா – பிரான்ஸ் விமானப் படைகள் இணைந்து 'கருடா கூட்டு நடவடிக்கை'

## ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப்படை நிலையத்தில்



4.5 தலைமுறை விமானங்களின் நான்கு அல்லது ஐந்து படைப்பிரிவுகளை இந்திய விமானப்படையின் இருப்புப் பட்டியலில் வைத்திருப்பதன் அவசியத்தை ஏர் சீஃப் மார்ல் வி.ஆர்.சௌதாரி செவ்வாயன்று வலியுறுத்தினார்.

ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப்படை நிலையத்தில் இந்திய விமானப் படை மற்றும் பிரெஞ்சு விமானப்படைக்கு இடையேயான கூட்டுப் பயிற்சியின் போது, மோதல்களின் விளைவுகளை தீர்மானிப்பதில் விமான சக்தி முக்கியமானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று ஏர் சீஃப் மார்ல் சவுதாரி கூறினார்.

இந்திய விமானப் படை தலைவர்(தளபதி) மற்றும் அவரது பிரான்ஸ் சகா (தளபதி) ஜெனரல் ஸ்டீபன் மில்லே ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர்.

பிரெஞ்சு வான் மற்றும் விண்வெளிப் படையின் (FASF) தலைமைத் தளபதி மில்லே, சுகோய் 'சு –30' விமானத்தில் பறந்தார், அதே நேரத்தில் ஏர் சீஃப் மார்ல் சௌதாரி ரஃபேல் போர் விமானத்தில் இருந்தார்.



முன்னுதாரணமாக இந்திய விமானப் படை மற்றும் பிரெஞ்சு வான் மற்றும் விண்வெளிப் படை ஆகிய இரண்டின் தலைவர்கள் 'கருடா நடவடிக்கை'யின் போது பறந்த பல விமானப் பயணங்களில் ஒன்றில் விண்ணில் ஏறினர் என்று இந்திய விமானப் படை ட்வீட் செய்தது.

இந்த தனித்துவமான விமானம் இரு தளபதிகளுக்கும் பயிற்சிகள் பற்றிய சரியான கண்ணோட்டத்தை வழங்கியது.

முதன்முறையாக 'சு – 30'இல் பறப்பதில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய தளபதி மில்லே, ஏ – 330 மல்டி ரோல் டேங்கர் போக்குவரத்து விமானத்தைப் பயன்படுத்தி ஒரு மணி நேர பயணத்தின் போது நடுவானில் எரிபொருள் நிரப்புவது போன்ற சில உயர்மட்ட பணிகளைச் செய்ய முடியும் என்றார்.

இயக்கத்தன்மையை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது மற்றும் எங்கள் விமானிகள் ஒருவருக்கொருவர் சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்துவது எப்படி என்பதை நாங்கள் கற்றுக்கொண்டோம் என்று மில்லே செய்தியாளர்களிடம் கூறினார்.

ஏர் சீஃப் மார்ல் சௌதாரி, அனைத்து எதிர்கால மோதல்களிலும் விமானப்படையின் பங்கை வலியுறுத்தினார். இந்திய விமானப் படைக்கு 4.5 தலைமுறை விமானங்கள் தேவை என்றும் அதில் நான்கு அல்லது ஐந்து படைப்பிரிவுகள் அவசியம் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

திறன் மற்றும் அனுபவத்தை மேம்படுத்துவதில் இத்தகைய பயிற்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு பயிற்சியின் போதும், சிரமத்தின் அளவு அதிகரிக்கிறது மற்றும் பங்கேற்கும் விமானங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது என்று IAF தலைவர் கூறினார்.

இந்த முறை பயிற்சியில் நாங்கள் நான்கு முழுப் படையணிகள் பங்கேற்கிறோம். LCH தேஜாஸ் மற்றும் பிரெஞ்சு மல்டி ரோல் டேங்கர் டிரான்ஸ்போர்ட் ஆகியவை இந்தோ – பிரெஞ்சு கூட்டுப் பயிற்சியின் ஏழாவது பதிப்பில் முதல் முறையாக பங்கேற்கின்றன, என்று அவர் கூறினார்.

இருதரப்பு பயிற்சியின் ஏழாவது பதிப்பு, கருடா VII, ஒக்ரோபர் 26 அன்று ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 12 வரை அது தொடர்ந்தது.

# பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் எதிர்க்கட்சிக்கும் தார்மீக பொறுப்பு உள்ளது!

## வியாழேந்திரன் இடித்துரைப்பு



நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது ஆளும் கட்சியின் பொறுப்பு மட்டுமன்றி எதிர்க்கட்சி உட்பட அனைவருக்கும் அந்த தார்மீக பொறுப்பு உள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அடுத்த வருடத்துக்கான வரவு – செலவு திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர், அதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கிராமப் பகுதி இளைஞர்களை பொருளாதார உற்பத்தியில் ஈடுபடுத்தி ஊக்குவிக்கும் திட்டம் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். கடந்த காலங்களில் இளைஞர்களை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் அதிகம் பேசப்பட்டது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதேபோன்று விவசாய உற்பத்தி பொருளாதாரத்தில் இளைஞர்களைப் பங்கேற்க செய்வது தொடர்பிலும் பேசப்பட்டது. எனினும் அதை நடைமுறைப்படுத்துவது கஷ்டமான காரியமாக இருந்தது.

அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் மகாவலி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம், வனஜீவ ராசிகள் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் கீழ் உள்ள காணிகளை மீட்டெடுத்து இளைஞர்களுக்கு விவசாய உற்பத்திக்கு வாய்ப்பு அளிப்பது தொடர்பில் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது வரவேற்கத்தக்கது. – என்றார்.

# கொழும்புக்கான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பித்தது ஜசீரா எயார்வேஸ்!

குவைத் எயார்லைன்ஸ் ஜசீரா எயார்வேஸ் கொழும்புக்கான விமான சேவையை மீண்டும் தொடங்கியுள்ளது.

ஜசீரா எயார்வேஸ் குவைத்துக்கும் கொழும்புக்கும் இடையில் வாரத்திற்கு மூன்று முறை விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை, இந்த புதிய விமானங்கள் கொழும்பில் இருந்து 50 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கு இணைக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கான மேலதிக விமான சேவைகள் மூலம் இலங்கையில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என்றார் அமைச்சர்.

சமீபத்திய வாரங்களில், பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிட்ஸர்லாந்து மற்றும் ரஷ்யாவிலிருந்து பல விமான நிறுவனங்கள் கொழும்புக்கான விமான சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளன.

# ஹிருணிகா உள்ளிட்ட 15 பேருக்குப் பிணை!



ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, சந்தேகநபர்கள் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 50 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கு மீண்டும் பெப்ரவரி 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# நாட்டின் சனத்தொகை கணக்கெடுப்பை 2023 ஆரம்பத்தில் முன்னெடுக்கத் திட்டம்

நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பு அடுத்தாண்டு ஆரம்பத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிடுகிறது.

இதன் முதல் கட்ட வரைபட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அதன் பணிப்பாளர் நாயகம் பி.எம். பிரசாத் அநுர குமார குறிப்பிட்டார்.

அதன் இரண்டாம் கட்ட, பட்டியல் எடுப்பதற்காக அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கும் திட்டம், இம்மாதம் மற்றும் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது என்றும் இதற்காக ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆதரவு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டியல் எடுக்கும் நடைமுறையின் பின்னர், அடுத்த ஆண்டின் முதல் மாதங்களில் நாட்டின் மக்கள் தொகை மற்றும் குடியிருப்புக் கணக்கெடுப்பை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு அனைத்து தனியார் நிறுவனங்களினதும், மக்களினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாக திணைக்கள பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர், 2012 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இருந்தபோதிலும், கடந்த காலங்களில் கொவிட் தொற்று நோய் காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ள முடியவில்லை என்று மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# இந்தியாவிலிருந்து வந்த பெண் உள்ளிட்ட மூவரிடம் கொள்ளை; உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட நால்வர் பொலிஸில் சரண்!

இந்தியாவுக்கு சென்று துணி மணிகளைக் கொள்வனவு செய்து எடுத்து வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் போது, ஜா எல பகுதியில் வைத்து பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர் பயணித்த வாகனத்தை மறித்து அவர்களைக் கைது செய்து, அவர்கள் உடைமையிலிருந்த 40 இலட்சம் ரூபா வரை பெறுமதி மிக்க வெளிநாட்டு நாணயம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்டனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், களனி வலய குற்ற விசாரணைப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட நால்வர் கொண்ட குழு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) சரணடைந்தது.

குறித்த நால்வருக்கும் எதிராக சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் இந்த நால்வரும் சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் சரணடைந்தனர்.

இந் நிலையில் அவர்களை சந்தேக நபர்களாக ஏற்றுக்கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவல, சந்தேக நபர்கள் நால்வரையும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

25 ஆம் திகதி சந்தேக நபர்களை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறு கட்டளையிட்ட நீதிவான் ஹர்ஷன கெக்குணவல, அதற்காக அவர்களின் அடையாளங்களை மறைத்து மன்றில் ஆஜர் செய்யுமாறு சிறைச்சாலைகள் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவுக்கு சம்பவத்துக்கு முகம் கொடுத்ததாகக் கூறப்படும் மூவரும் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஜே.வை.டி. கிரிஷாந்தவின் நேரடி கட்டுப்பாட்டில் சிறப்புக் குழுவொன்று இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், சார்ஜன் ஒருவர், இரு கான்ஸ்டபிள்கள் அடங்கிய நால்வர் கொண்ட குழுவை கைது செய்யவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தற்காலிகமாக கடமையிலிருந்தும் இடை நிறுத்தப்பட்டனர். அவர்கள் விசாரணை ஆரம்பித்தது முதல் தலைமறைவான நிலையில் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டனர்.

இந் நிலையில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆரம்பகட்ட விசாரணைகளில், கடந்த 9 ஆம் திகதி இரவு குறித்த பொலிஸ் குழு, தனியார் ஒருவரின் வானில் சென்று இந்த கொள்ளையை அரங்கேற்றியுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இது தொடர்பில் மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆரம்பகட்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், சட்ட விரோதமாக நாட்டுக்குள் தங்க நகைகள், வெளிநாட்டு நாணயங்களை கடத்துவது தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்புக்காக தாங்கள் சென்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அவர்கள் அந்த சுற்றிவளைப்பு தொடர்பில் உயரதிகாரிகள் எவருக்கும் அறிவித்திருக்கவில்லை என மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர், இந்தியாவிலிருந்து கட்டுநாயக்கவுக்கு வந்து அங்கிருந்து கொழும்பு நோக்கி வான் ஒன்றில் பயணித்துக்கொண்டனர்.

அந்த வானைப் பின் தொடர்ந்து தனியார் வான் ஒன்றில் வந்துள்ள இந்த பொலிஸ் குழு, அவர்களை ஜா எல பகுதியில் வைத்து மறித்து கைது செய்துள்ளனர்.

கொழும்பு 13 கதிரேசன் வீதிஅயை சேர்ந்த ஒருவர், தெஹிவளையைச் சேர்ந்த ஒருவர் மற்றும் வாரியப்பொல பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் குறித்த உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் பின்னர் பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். விசாரணைகளின் போது அடிக்கடி இந்தியாவுக்கு சென்று துணிமணிகளை எடுத்துவரும் குழுவினரே அவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

எனினும் பொலிஸ் நிலையம் அழைத்து வரப்பட்ட அவர்கள், உயர் பொலிஸ் அதிகாரிகளின் ஆலோசனைகள் எதனையும் பெற்றுக்கொள்ளாமல், பொலிஸ் புத்தகங்களிலும் எந்த பதிவினையும் இடமால், கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இரவோடிரவாக விடுவிக்கப்பட்ட அவர்கள், மறு நாள் 10 ஆம் திகதி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவை சந்தித்து, முறைப்பாடளித்துள்ளனர்.

தம்மைக் கைது செய்து விடுவித்த பொலிஸ் குழுவினர், கைது செய்யும் போது அவர்களின் பொறுப்பிலெடுத்த 6 மோதிரங்கள், 4 தங்க வளையல்களையும் 38 ஆயிரம் அமரிக்க டொலர்களையும் திருப்பித் தரவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந் நிலையிலேயே தற்போது குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நீதிமன்றில் சரணடைந்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தமிழ் தேசியம் வர்த்தகமாகிவிட்டது

அங்கம் - 182

தமிழ் மக்களின் விதி இப்படித்தான் போகும் என்பதை குடுகுடுப்பைக்காரர் சொல்வது போல், சுபாஸ்கரன் ரணிலோடும் விடுதலையான கைதிகளுடனும் நின்ற படங்களில் ரெலோத் தலைவர் செல்வமும் சுரேந்திரனும் இருந்தமை சில கிசுகிசுப்புகளை எழுப்பி விட்டன.

இந்த முனைப்புக்கள் கூட்டமைப்பை குழி தோண்டி புதைத்து, ரெலோவின் பகுதியினர் ரணிலுடன் சேர்ந்து இயங்குவதற்கான முஸ்தீபு என ஒருபுறமும், மற்ற பக்கத்தில் சுபாஸ்கரன் மஹிந்தவின் குடும்பத்திற்கு நெருக்கமானவர், அவர்களின் பணங்களில் பெரும் பகுதி 'லைக்கா' நிறுவனத்தின் மூலம்தான் புரளுகிறது, அந்தப் பின்னணியில் தான் ரணில் மூலம் சுபாஸ்கரன் முன்னுக்குக் கொண்டு வரப்படுகிறார், மஹிந்தவின் பகுதிகள் சர்வதேச மனித உரிமை மன்றினதும் எழக்கூடிய சர்வதேச மனித உரிமைச் சவால்களையும சமாளிப்பதற்கான பேரம் பேசலுக்கான தந்திர நடவடிக்கைகள் இவை எனக் கருதுவோர்.



செல்வம்

போரின் முடிவில் அன்றைய ஐ.நாவின் காரியதரிசி பான் – கி – மூன் ஸ்ரீலங்காவுக்கு வந்த போது, அவர், சர்வதேசம் தற்பொழுது இனப் பிரச்சினைக்குத் தீர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என தந்த அழுத்தத்தில், மஹிந்த தான் போர்க் காலங்களில் தெரிவித்த தீர்வுகளை அமல்படுத்துவேன் என்ற வாக்குறுதிகள் தரப்பட்டது. பின்னர் கூட்டமைப்பின் சம்பந்தனோடு அவை பற்றி சில சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டாலும் ராஜபக்ஷ தரப்புகள், தமிழ் அரசியல் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளும் தாங்கள் சர்வதேச மனித உரிமை மன்றுக்கு கொடுக்கும் அழுத்தங்களைக் கைவிட்டால் '13 பிளஸ்' ஆன தீர்வை ஆராயலாம் என்றார்கள். புலம்பெயரில் இவற்றை முன்னெடுத்த தரப்புகளுக்கு மேல் சம்பந்தன் தரப்புகளுக்கு ஆளுமை இருக்காதமையால் அவை நடக்கவில்லை. உதட்டளவில் தீர்வு தேட வேண்டும் எனக் கூறப்பட்டாலும் அவை எந்த தரப்பாலும் முன்னெடுக்கப்படவில்லை.



சுபாஸ்கரன்

இப்பொழுது சர்வதேச மனித உரிமை மன்றின் தீர்மானங்கள் திசை மாறி போகலாம் என்ற கருத்தில் இந்த முயற்சி ஒரு பேரமாகலாம். அதேசமயம் ரணிலுக்கு தாங்கள் பேச்சுவார்த்தைகள் நடத்துகிறோம் எனவும் நாடு சுமூகமான நிலைக்குத் திரும்புகிறது என்ற படத்துக்கும் வசதியாகலாம்.

மஹிந்த தரப்போடு இருக்கும் தொடர்புகளையும், அவர்களது பணம் சுபாஸ்கரனின் படங்களில் முதலீடு செய்யப்படவில்லை என அவர் 'கத்தி' திரைப்பட விழாவில் வெளிப்படுத்தியிருந்தார்.

ரெலோ சமஸ்டியின் அடிப்படைகளில் கூட்டமைப்பினரோடு இணைந்து ரணிலின் பேச்சு வார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. செல்வம் அரசியல் கைதிகளின் விவகாரங்களிலும் ஈடுபட்டமையால் சுபாஸ்கரனுடனும் தொடர்புகள் இருந்திருக்கலாம். முக்கிய பெரும் தொழிலதிபர்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து பார்க்கப்பட்டாலும், பலர் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அப்படியான தொடர்புகளை வைத்திருப்பது சர்வதேசத்தில் வழமையானது. அதனால் அச்சமோ சந்தேகமோ கொள்ள தேவை இல்லை. ஆளைப் பார்க்காமல் அவர் தரக்கூடிய செய்தியையும் செயற்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.

இந்தப் படங்களின் பின்னணிகளிலும் ரெலோ தரப்பினர் கூட்டமைப்பில் இருக்கும் அதிகாரப் போட்டிகளினால் வெளிப்படையாக மடியில் கைவத்தே தாக்குவதும், தமிழ் மக்களின்/அதுவும் ஸ்ரீலங்காவின் – அரசியலிலும் ஏதோ நடந்து கொண்டிருக்கின்றது என்பதும், அதற்கு சுபாஸ்கரனின் பங்களிப்பு இருக்கத்தான் செய்யும் என்ற உணர்வு தோன்றுகிறது.

தமிழ் மக்கள் மாத்திரம் அல்லர், பொருளாதாரச் சிக்கல்களில் மாட்டி, அத்தியாவசியத் தேவைகளுக்கு கையேந்தி, போராட்டங்கள் நடத்தி, இன்று வலிந்து நிற்கும் தென்னிலங்கை கூட சுபாஸ்கரன் போன்றோர் நாட்டின் வளர்ச்சிக்குத் தரக்கூடிய உதவிகளை இரு கரம் கூப்பி ஏற்றுக் கொள்ளலாம்.

பொன்னம்பலம் இராமநாதன் அவர் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இங்கிலாந்து சென்று திரும்பிய போது, துறைமுகத்திலிருந்து பல்லக்கில் தோளில் வைத்து பவனி கொண்டு சென்ற சரித்திரங்களும் உண்டு. இன்றைய பேராண்மையில் அவை நடக்குமா என்பது வேறு விடயம்.

ஆனால் தென்னிலங்கை அவர்களுக்கு வரக்கூடிய உதவிகளை மறுக்கப் போவதில்லை. தமிழ் மக்களோ இதுவரை காலமும் அரசியலில் கேட்டது லட்சியத்திற்கான பேச்சுக்களே ஒழிய, சந்தித்தது வன்முறைகளும், போர்களும், அவற்றினால் பட்டினியும், உறவுகளை இழந்ததும்தான்.

எங்கே ஒரு தீர்வோ மாற்றமோ வந்து தங்களுக்கு மீட்சி தரும் என ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு சுபாஸ்



சுரேந்திரன்

காரன் போன்றோர் தங்களது ஆளுமைகளால் தரக்கூடிய மாற்றங்கள் நன்மையாகலாம். ஆனால், அதில் மற்றவர்களின் தலையீடுகள் குட்டையைக் குழப்பி நீர்த்துப் போக வைக்கலாம்.

மஹிந்த ராஜபக்ஷ தரப்புகளின் பணம் சுபாஸ்கரன் போன்றவர்கள் மூலம் புரளுகிறது என்ற கருத்து போல, புலம்பெயரில் விடுதலை புலிகளுக்காக சேர்க்கப்பட்ட பணங்களும் இவர் போன்றவர்கள் மூலம் உலாவுகின்றன என்ற பேச்சுக்களும், 'கருப்பு' சந்தையில் உள்ளவற்றை 'வெள்ளை' ஆக்கிக் கொள்ள அதன் பின்னணியில் உள்ள பழைய விடுதலைப் புலிகளின் முகவர்கள் முயற்சிக்கிறார்கள் என்பதும் அவர்களுக்கு எதிரானவர்களின் வாதம்.



மஹிந்த

அதில் என்ன அப்படியான பணங்களில் இருந்துதான் சிறையில் வாடிய கைதிகளுக்கான நிதி தரப்படுகிறது. அதனை மக்கள் ஆட்சேபிக்கத் தேவையில்லை. அவை மக்களுக்காகப் பாடுபட்டவர்களுக்குச் சென்று சேருகின்றன. அப்படியான பல முன்னெடுப்புகளை மக்கள் இனிக் காணலாம் என ஒரு வாசுக நண்பர் ஆணித்தரத்துடனும், தீரமான குரலில் நான் அவதானித்த நேர்மைத் திறத்துடனும் கூறினார். 'பணம் பாதாளம் வரையும் பாயும்' என்பார்கள். பாயும் வழியில் அது எவ்வளவற்றயோ மண்ணில் புதைக்கும். அப்படிப் புதையுண்டு போனவை எல்லாம் காலக்கிரமத்தில் உக்கிப் போனாலும் ஊன்றப்பட்ட விதைகள் மாத்திரம் உழைத்து மரமாகும். எத்தனையோ விதைகளை வித்துடல்களாக தமிழ் மக்கள் ஊன்றியுள்ளார்கள். அவையும் உக்கிவிடாமல் முளைத்து எழுந்து, சிறு அலைகள் போல் அல்லாது ஆர்ப்பரித்து, நறுமணம் பரப்புவதற்கான குறிக்கோளுடன் இப்படியான அரசியல் நகர்வர்கள் யார் முன்னெடுத்தாலும் வரவேற்கப்பட வேண்டியவை.



ரணில்

ஆதங்கங்களில் விடுதலைப் புலிகளின் தீவிர பங்குதாரராக ஐரோப்பிய நாட்டில் வாதியும் புலம்பெயராளருடன் பேசிய போது அவர் "அண்ணை! தமிழ்த் தேசியம் என்பது இப்பொழுது வர்த்தகமாகிவிட்டது. அது மட்டுமல்ல வர்த்தகர்கள் கைகளில் போய்விட்டது. நடப்பதை காண வேண்டும்." – என்றார். மேலும் இருக்கின்ற அரசியல் தரப்புகளை விட சுபாஸ்கரன் போன்றோர் ஆளுமையுடன் பேரம் பேசலாம் என்ற அபிப்பிராயமும் இருந்தது.

சுபாஸ்கரன் 1972 இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை என்ற ஊரில் பிறந்து, அந்தப் பகுதியிலிருந்து இயங்கிய விடுதலைப் போராளிகளையும் இராணுவ அட்டூழியங்களையும் அறிந்து பழக்கப்பட்டவர். இவற்றால் நாட்டில் இருந்து வெளியேறி ஜேர்மனி, பரிஸ் போன்ற நகரங்களில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருந்த அவர்களது மக்களிடையே வாழ்ந்து அந்த துன்பங்களைப் பகிர்ந்தவர். அவரை அந்த காலங்களிலேயே அறிந்திருந்த நண்பர் சுபச்ஸ்கரன் எந்த நேரத்திலும் தமிழ் மக்களுக்கு விபரீதம் தரக்கூடிய ஏற்பாடுகளில் ஈடுபடுவார் எனத்வ்தான் நம்பவில்லை, ஆனால் தமிழ்த் தேசியமே வியாபாரமாகிவிட்டபோது, இனி விளைவுகளைத்தான் பார்க்க வேண்டும் என அங்கலாய்த்தார்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## அரசியல் தீர்வு பற்றி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையிலேயே இப்படி அவர் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டு இருப்பவை வருமாறு:-

ஜனாதிபதியும், அவரின் அரசாங்கமும் வெளிநாடுகளின் கருணையில் ஆட்சியில் நீடிக்கும் நிலையில் தமிழர் தரப்புகளுடன் அரசியல் பேச்சு வார்த்தை ஒன்று அவசியமாகவும் அவசரமாகவும் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது.

அதே நேரத்தில் இனப்பிரச்சினையை உக்கிரமடைய செய்து, நாட்டைப் பற்றி எரிய வைத்த ஒற்றையாட்சி முறையை அகற்றுவது பற்றி சிந்திப்பதற்குக் கூட சிங்களத் தரப்பில் ஆளும் கட்சி உட்பட எந்தக் கட்சியும் தயாராக இல்லை.

இந்த நிலைமையில் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு என்னதான் இருக்கிறது? சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி முறையை உறுதியுடன் வலியுறுத்தி நிற்பதைத் தவிர. தமிழ்த் தேசிய தரப்புக்கு இப்போது வேறு தெரிவு எதுவும் கிடையாது.

நீதியான முறையில், விட்டுக் கொடுப்போடு, பிரச்சினையை அணுகுவதற்கு சிங்கள தரப்புகள் முன்வராத வகையில் பிரச்சினை என்பது தொடர்ந்து நீடிக்கவே செய்யும் என்ற செய்தி தமிழர் தரப்பால் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் இதுவாகும். - என்று உள்ளது

## 20 ஆம் திகதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்புகிறார் என ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

அமைச்சரவை மாற்றம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ள இச்சமயத்தில் பஸில் நாடு திரும்புகின்றமை தென்னிலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## மார்ச்சுக்குள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் அடங்கலாக மொத்தம் பதினாறு தரப்புகள் இன்றைய தினம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு சென்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தினர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துமாறு கோரி கடிதம் ஒன்றையும் அக்குழுவினர் கையளித்தனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து பின்னர் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ -

அரசமைப்பிற்கு ஏற்ப குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் - அதாவது இந்த வருடம் செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் - உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுமா என்பது தொடர்பில் நாம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டறிந்து கொண்டோம்.

அரசமைப்பிற்கு ஏற்ப குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும், அதன் மூலம் புதிய உள்ளூராட்சி சபைகள் ஸ்தாபிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் தெளிவாக எமக்கு தெரிவித்தனர்.

குறிப்பாக நாட்டு மக்களின் இறையாண்மை மற்றும் சர்வசன வாக்குரிமையை உறுதிப்படுத்தும் செய்தியை தேர்தல் ஆணைக்குழு எமக்கு வழங்கியுள்ளது. தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் எமக்கு இதனை உறுதியளித்தனர். - என அவர் தெரிவித்தார்.

## மனித உரிமைகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமீப நாள்களில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்படும் தன்னிச்சையான செயற்பாடுகளின் ஊடாக மக்களின் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றமையை கண்காணிக்கக்கூடியதாக உள்ளதென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையானது ஜனநாயக சமூகத்தின் உயிர்ப்பு மற்றும் சட்டவாட்சிக்கு பாரிய அச்சுறுத்தல் என்பதே மனித உரிமை ஆணைக்குழுவின் நிலைப்பாடு என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

சட்டத்தை பாதுகாப்பதற்கும் நிலைநாட்டுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

அதற்கமைய, நவம்பர் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு செயலாளரும், பொலிஸ் மா அதிபரும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியா புனர்வாழ்வ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் புனர்வாழ்வு நிலையத்தில் நீதிமன்ற உத்தரவுக்கமைய தங்க வைக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்டவர்களில் 5 பேர் நேற்று மாலை விளையாட்டு பயிற்சியில் ஈடுபட்ட சமயம் தப்பியோடியுள்ளனர் எனத் தெரியவருகிறது. இவர்கள் ஐவரும் வடபகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இதனையடுத்து அந்தப் புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து அவர்களை மீளக் கைது செய்வதற்காகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## சிறுவன் பலி; மூவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முனதினம் காலை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் மற்றும் இரு மகன்களை அருகில் உள்ள வீட்டில் இருந்த நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூன்றரை வயது சிறுவன் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான்.

38 வயதான தாய், 19 வயது மகள் மற்றும் 15 வயது சிறுவன் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சில காலமாக நிலவி வந்த தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட வாளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# தவறை ஏற்றுக்கொள்ளுங்கள் மன்னிப்பதற்கு நாங்கள் தயார்!

## பேராயர் கர்தினால் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின் புலத்தில் இருப்பவர்கள் மறைந்து கொள்ள முயற்சிக்கி றார்கள்.

இருப்பினும் தங்களின் பாவங்களுக்கு மிகவும் வேத னையான கர்மவினையை சந்திக்க நேரிடும் என்றும் தவறை ஏற்றுக் கொள்ளுங்கள் அதனை நாம் மன்னிப் பதற்குத் தயாராக இருப்பதாகவும் கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள் ளார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு கனேமுல்ல, பொல்லத்த பிரதே சத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீட்டுத்திட்டத்தை குடும் பங்களுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது பேராயர் இதனைத் தெரி வித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிப்படை யான விசாரணை முன்னெடுக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி எனக்கு தனிப்பட்ட வகையில் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தமக்கு வந்த மறுநாளே அவர் என்னை தொலைபேசி மூலம் அழைத்து அவற்றையெல்லாம் எவ்வாறு வெளிப்படை யாகக் கூற முடியும்? என்று கேட்டார்.

அறிக்கைகளை சிபாரிசு செய்ய வேண்டியது நீங்கள் இல்லை இதனை பொலிஸாரிடம், நீதிமன்றத்திடம் ஒப் படையுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அதற்கு அவர் ஒன்றும் கூறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்று பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருந்தவர். ஏன் அவருடைய பொறுப்புகளை மறைப்பதற்கு முயற்சிக்கிறார். அதன் பின்னணியில் அரசியல் சதி ஒன்று இருப்பதாக நாடாளு மன்ற தெரிவுக்குழு அறிக்கையில் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பான ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பல தெளிவற்ற விடயங் கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை வெளிக்கொணர் வதற்கு எவரும் ஆர்வம் காட்டுவதில்லை.

சட்டா அதிபர் திணைக்களத்துக்கு கண்களும் இல்லை, காதுகளும் இல்லை,அதனால் ஒன்றையும் செய்வதற்கு முடியாது உள்ளது. தற்போது நாட்டில் செவிடான யானை கள் மற்றும் ஒரு பெரிய யானையும் அதன் கூட்டத்துடன் வந்துவிட்டது. அவர்களிடம் வீணை வாசிப்பது பயனற்றது.

சட்டத்தை நினைத்தப்படி மாற்றி இதை வைத்து அதனை கை கழுவி விடலாம் என்று நினைக்கிறார்கள். அவ்வாறு நினைத்தால் மற்றவர்களுக்கு ஹீரோவாக தோன்றலாம். ஆனால் ஒன்று நினைவில் இருக்கட்டும். வேதத்தில் உள்ளது. நீங்கள் செய்த பாவங்கள் உங்களை பின் தொடரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். – என்றார்.




# உலக உணவுத் தின கவனவீர்ப்பு போராட்டம்

## வவுனியாவில் நடந்தது

வவுனியாவில் மக்கள் திட்டம் ஒன்றியத்தின் ஏற்பாட் டில் உலக உணவு தினம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

'பட்டினி மந்த போசாக்கு என்பது திட்டமிட்டு குற்ற மாகும்' எனும் தொனிப்பொருளில் வட மாகாண மக்கள் திட்டம் ஒன்றியத்தின் இணைப்பாளர் ந.தேவகிருஷ்ணன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அருந்ததி விருந்தினர் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார், முல்லைத்தீவு, வெலிஓயா, வவு னியா போன்ற பிரதேசங்களில் செயற்படும் அந்த அமைப்பாளர்களின் ஒத்துழைப்பில் மக்களுக்கு உண வளிக்கும் முறையில் மாற்றத்துக்காக ஒன்றிணைவோம் எனும்கருப்பொருளையைப்படுத்திஅந்தஅமைப்பினரால் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

நிகழ்வின் இறுதியில் மண்டபத்திற்கு வெளியே தமது பிரகடனத்தை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றறயும் மேற்கொண்டனர்.

காணி மற்றும் விவசாய சீரமைப்பு இயக்கம் மக்கள் திட்டம் ஒன்றியத்துடன் இணைந்து உலக உணவு தினத்தை மேற்கொண்டனர்.

# காத்தான்குடி இரும்பக களஞ்சியசாலையில் தீ!

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காத்தான்குடி – 01 முதியோர் இல்ல குறுக்கு வீதியில் அமைந்துள்ள பிரபல கட்டட விற்பனைநிலையம் ஒன்றுக்குச் சொந்த மான களஞ்சியசாலையில் தீ பரவியுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) விடியற்காலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ பரவலின் காரணமாக களஞ்சியசாலை முற்றாக எரிந்து சேதமாகியுள்ளதுடன், மின்னொழுக்கே இதற் குக் காரணம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் களஞ்சியசாலையில் 40 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருள்கள் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன எனவும் அவை அனைத்தும் எரிந்து தீக்கிரையாகியுள்ளன எனவும் அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதான வீதிலுள்ள கொழும்பு ஹாட் வெயார் நிறுவனத்துக்குச் சொந்தமான களஞ்சியசாலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியைச் சேர்ந்த 16 பேருக்கு ஈஸ்டர் தாக்குதல் குறித்து விளக்கமறியல்!

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகக் காத்தான் குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 16 பேருக்கு விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது இவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தே கத்தின் பேரில் காத்தான்குடியை சேர்ந்தவர்கள், சஹ்ரா னின் சகோதரி மற்றும் அவரது கணவர் உட்பட 66 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 3 பேரை குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட அதேவேளை மீதமுள்ள 63 பேரில் 47 பேர் பிணையிலும் விடுவிக்கப் பட்ட நிலையில் மீதமுள்ள 16 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிணையில் விடுவிக்கப்பட்ட 47 பேரை யும் அடுத்தவருடம் ஜனவரி 31 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனை தடுப்பு குழுவின் கூட்டம்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனை தடுப்பு குழுவின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை வவுணதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம் பெற்றது.

தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ஒருங்கிணைப்பில் கூட்டம் ஆரம்பமானது.

கிராமங்களில் சட்டவிரோத போதைப் பொருள் உற்பத்தி தொடர்பாகவும் மக்களிடையே அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை தொடர்பாகவும் இதன்போது பிரதானமாக ஆராயப்பட்டது.

இதன் போது, உதவி பிரதேச செயலாளர் சுபா சதாக ரன் மற்றும் ஆயித்தியமலை, வவுணதீவு பொலிஸ் அதி காரிகள், தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் உதவி பொறுப்பதிகாரி, மண் முனை மேற்கு பிரதேச சுகா தார வைத்திய அலுவலக சுகாதார அதிகாரிகள், கோட்டக் கல்விப் பணிப்பா ளர், மட்டக்களப்பு கலால் திணைக்கள அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் கள், அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் எனப் பலர் இந்தக் கூட்டத்தில் பிரசன் னமாகியிருந்தனர்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2022இல் வெளியிடப்பெற்றது.